Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# தமிழிசைப்பா முதன்மை சுட்டும் சேரமான் பெருமானின் திருவாரூர் மும்மணிக்கோவை, திருக்கைலை ஞானஉலா

**முனைவர் ஸ்ரீநாகபூஷணி அரங்கராஜ்**
**முதுநிலை விரிவுரையாளர்,**
**இசைத்துறை, இராமநாதன் நுண்கலைவளாகம்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**yallnakam@gmail.com**

53

பதிகங்களாலும் பண்களாலும் பெருமை கொண்டு விளங்குவன சைவத்திருமுறைகள் ஆகும். திருப்பதிகம், திருப்பாட்டு, திருவிசைப்பா, திருநெறிய தமிழ், திருமொழி, திருத்தொண்டத்தொகை ஆகியவை எல்லாம் இறைவழியெழும் உணர்வினை ஊட்டும் திருத்தொடர்களாகும். இவற்றிற்கு இச் சிறப்பினை அளித்து நிற்கும் சொல். "திரு" என்னும் அடைமொழியாகும், திரு எனப்படும் சொல், அருள் மணக்கும் உயர் தனி மங்கலத் தமிழ்ச் சொல்லாகும். அந்த சிறப்பின் வகையின், பன்னிருதிருமுறைகளில் பதினோராந்திருமுறை, திருவாலவாயுடையர் முதல் நம்பியாண்டார் நம்பி ஈறாக பன்னிரு அருளாளர்களால் பாடப்பட்ட, திருமுகப்பாசுரம் முதலாக, திருநாவுக்கரசுதேவர் திருவேகாதச மாலை ஈறாக நாற்பது நூல்கள் அடங்கியுள்ளன. இவற்றில் தமிழிசைப் பாமுதன்மை சுட்டும் சேரமான் பெருமானின் திருவாரூர் மும்மணிக்கோவை, திருக்கயிலாய ஞானவுலா, ஆகிய இரு பிரபந்தங்களின் சிறப்பில் இவ் ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

சேரமான் பெருமாள் நாயனார் அருளிச் செய்த திருவாரூர் மும்மணிக்கோவையிலடங்கும் அற்புதங்களும், பாடற்சிறப்புக்களும், பாநலங்களும், திருக்கயிலாய ஞானவுலாவிலடங்கும், பாடற்சிறப்புக்கள், அற்புதங்கள், பாநலங்கள் என்பன இவ் ஆய்வினூடாக விபரிக்கப்பட்டு இவ் ஆய்வு விபரண ஆய்வாக நோக்கப்படுகின்றது. இவ் ஆய்வின் எல்லையாக, பன்னிரு திருமுறையில் பதினோராந் திருமுறையில் சேரமான் பெருமாள் நாயனாரின், திருவாரூர் மும்ணிக்கோவை, திருக்கயிலாய ஞானவுலா ஆகிய தமிழிசை நூல்களிலுள்ள பிரபந்தங்கள் மாத்திரம் இவ் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

ஆய்வின் பயனாக :- பன்னிரு திருமுறைகளில், பதினோராந்திருமுறை பாடல்கள் பிரபந்தப் பாடல்களாக அமைந்த நிலையில் இசையாளர்களால், இசை அரங்குகளில் பாடப்படுவதில்லை.

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

எதிர்வரும் காலங்களில் தமிழ்ச் சமூகத்திலுள்ள, இசையாளர்கள், இசை மாணவர்கள், இசை அறிஞர்கள், இப்பாடல்களை அறிந்து உரிய முறையில், பண்களை அதாவது இராகங்களை அமைத்து பாடி இசைத்தமிழின் பாநலன்களை பேணுவதற்கு வழிவகுக்கும் ஆய்வாக அமைகிறது.

சேரமான் பெருமான், திருவாரூர் மும்மணிக்கோவை, திருக்கயிலாய ஞானஉலா, பிரபந்தம், கண்ணிகள், பாடல்கள்.

சேரமான் பெருமாளின், திருவாரூர் மும்மணிக்கோவை, அகவல், வெண்பா, கட்டளைக் கலித்துறை என்னும் மூவகைப்பாடல்களையும், திருவாரூரில் எழுந்தருளிய, இறைவன் மீது பாடப்பட்டவையாக உள்ளன. சேரமான் பெருமாள், இந்நூலை இயற்றித் திருவாருர்ப் பூங்கோயிலில் சுந்தரர் தலைமையில் அரங்கேற்றம் செய்தருளினார்.

விண்ணகக் கங்கைப் பெருவெள்ளத்தை அடக்கி, அதனைச் சடையிற் சேர்த்தது, தேயுந் திங்களை அணிந்து காத்தது. நஞ்சினை உண்டு தேவர்களை உய்வித்தது, மேருமலையை வில்லாக வளைத்தது, முப்புரத்தை எரித்தது, தக்கன் வேள்வியை அழித்தது, கூற்றை அடக்கியது, காமனை எரித்தது, ஆணையை உரித்துப் போர்த்தது, அருச்சுணனுக்கு அருள் செய்தது முடிவாகிய பல அற்புதங்களினூடாக பாநலங்கள் சிறப்புடன் கையாளப்பட்டிருக்கின்றன.

துயிலா நோய் யாம் தோன்றத் தீத் தோன்ற
மயில்லெ வந்ததால் மாதோ ........................... (பாடல் 274)

கார்காலவருணனை சுட்டும் பாடலாக அமைந்த இப்பாடலில், தூங்காத நோயின் கண் யாம் வருந்த செங்காந்தள் மலர் தோன்ற, மயிலாட வந்து, நிலவுலகத்திற்கு அப்பாற்பட்ட அண்டத்துக்கும் அப்பால் உள்ளவனும், பிறைச்சந்திரனைத் தலையில் அணிந்தவனுமாகிய எம்பெருமானது கழுத்துக்கு ஒப்பான கருமேகம் வந்தது என்று சிறப்பாகப் பாடியுள்ளார்.

”இழையார் வனமுலை ஈர்ந்தன் புனத்தில்
உழையாகப் போந்த தொன்(று) உண்டே – பிழையாச்சீர்
(பாடல் – 277)
(கெடுதி வினவிப் புக்க தலைமகன் கூறியது)

அணிகலன்களை உடைய வனமுலையீர்! மிகுந்த குளிர்ச்சி பொருந்திய இவ்வனத்தில், சீர் பிழையாத அம்மானும், அனலாடிய திருவாரூர் இறைவனுமாகிய எங்கோ முன்பு உரித்த யானையைப் போன்ற களிறு ஒன்று இப்பக்கமாக வந்ததா? என்றவாறாக அப்பாடல் அமைகின்றது.

" நீயிருந்திங்(கு) என்போது நெஞ்சமே நீள் இருட்கண்
ஆயிரங் கை வட்டித்(து) அளவாடித் தீயரங்கத்(து)
ஐவாய் அரவசைத்தால் நண்பணைத் தோட்(டு) அன்பமைந்த
செய்வான் நல்லூரான் திறம்" (பாடல் – 292)

நெஞ்சமே! நீ இங்கு இருந்து என்ன பயன்? பெரும் இருளில் ஆயிரம் கைகளை வீசி, தீயில் நின்றாடி, அந்தத் தீயாகிய அரங்கில் ஐந்து வாய்களையுடைய பாம்பை இடையில் கட்டியுள்ளவனது பருத்த தோள்களுக்கு, அன்பாக அமைத்த செய்கைகளையுடைய தலைவனது வல்லமையை நீ அறியாய் என்றபடி இப்பாடல் சுட்டுகின்றது.

ஆயின அன்பாரே அழிப்பர் அனலாடி
பேயினவன் பாரோம்பும் பேரருளாளன் – தீயினவன்
கண்ணாளன் ஆரூர்க்.........................................
தலைவன் கூற்று (பாடல் – 298)

உளதாகிய அன்பை யார் அழிப்பர்? தீயை ஏந்தி, தீயில் ஆடுபவன், பேய்களைக் கணமாகக் கொண்டவன், உலகைக் காக்கும் பேரருளாளன், தீயின் மத்தியில் உள்ளவன், கண் போன்றவன், திருவாரூர் கடல்போலப் பெரிதும் குணமுடையவன் என்றவாறு அப்பாடல் அமைகின்றது.

தாழ்ந்து கிடந்த சடைமுடிச்
சங்கரன் தாள் பணியா
தாழ்ந்து கிடந்துறைவார் கிளை
போலயர் வேற்(கு) இரங்கிச்
சூழ்ந்து கிடந்த கரைமேல்
திரையென்றும் கையெறிந்து
வீழ்ந்து கிடந்தவ றித்துயி
லாதில் விரிகடலே. (பாடல் – 299)

தொங்கிக் கிடந்த சடைமுடியையுடைய சங்கரனது தாள் பணியாமல் பிறவியில் அழுந்திக் கிடந்து உறைகின்றவர் போல, வருந்தி இளைப்போனாகிய எனக்கு இரங்கி, சூழ்ந்து கிடந்த கரைமேல் திரைகளாகிய கையைவீசி, வீழ்ந்து, கிடந்து, அலறி, இப்பரந்த கடல் துயிலாது

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

உள்ள சிறப்பைப் பாடியுள்ளார் அருளாளர் சேரமான் அவர்கள்.

மலைநாட்டரசராக விளங்கிய பெருமாக் கோதையர் சேரமான் பெருமாள் நாயனார் என்றும், கழற்றறிவார் என்றும் அழைக்கப்பட்டார். இவர் உவர் மண்ணூறிய உடம்புடன் தன் எதிரே வந்த சலவைத் தொழிலாளியை திருநீறு பூசிய சிவனடியாராக வணங்கியதாய் கூறுவர்.

சுந்தரரிடம் தோழமை பூண்டிருந்த சேரமான் பெருமான் சுந்தரருடன் சேர்ந்து எல்லாத் தலங்களையும் தரிசித்தார். அந்தவகையில் கயிலைக்குச் சென்றபொழுது, திரு அணுக்கள் திருவாயிலில் சேரமானுக்கு தடை நேர்ந்தது. சுந்தரர் இறைவனிடம் பேரன்பு வேண்டி சேரமான் தடுத்து உள்ளதையும் தெரிவித்தார். சேரமானை அழைத்து வருமாறு, இறைவன் கட்டளையிட நந்திதேவர் அக் கட்டளையை நிறைவேற்றினார். சிவன்மீது ஒரு ஞானஉலா பாடியிருப்பதாயும், இறைவன் ஆணையிட்டால் பாடவிரும்புவதாயும் சேரமான் விண்ணப்பித்துக் கொண்டார். இறைவரும் அதற்கிசைந்து அவர் பாடக் கேட்டார்.

உலா என்பது தமிழில் தொண்ணூற்றாறு வகை நூல்களில் ஒன்றாகும். சேரமான் பெருமாளுக்கு முன்னர் யாரும் உலா பாடியதாகத் தெரியவில்லை. இதனால் முதன்முதலாக உலா நூல் பாடியவராக சேந்தனாரே கொள்ளப்படுகின்றார். சிவபக்தியிலும் சிறந்து விளங்கிய இவருக்கு, திருஆலவாயுடைய சிவனும் இவருக்கு திருமுகம் எழுதியருளினார்.

அருணகிரிநாத சுவாமிகள் இவருடைய கவிதிறமையை மெச்சி
"ஆதியந்தலா ஆசு பாடிய சேரர்" என்று ஆசுகவியாகக் குறிப்பிட்டுள்ளமை கூறத்தக்கதாகும்.

திருக்கைலாய ஞான உலா முதன்முதல் எழுந்த காரணத்தால் "ஆதி உலா" என்று வழங்கப்படுகிறது. சிவன் திருக்கைலையில் எழுந்தருளியிருக்கிறார். தேவர்கள் இறைவனைக் காண வேண்டுமென்று பேரார்வங்கொண்டு திருக்கோயிலின் முன்சென்று நின்று வேண்டிக் கொள்கிறார்கள். வேண்டுகோளுக்கு இரங்கிய சிவன் ஒருநாள் தம்மை அழகு செய்து கொண்டு வசுக்கள் போற்றிச் செய்யவும், முனிவர்கள் வாழ்த்துரை கூறவும், பன்னிரு கதிரவர்கள் பல்லாண்டு பாடவும், நாரதர் யாழ் வாசிக்கவும் மற்றும் பலவகையான சிறப்புக்களோடு திரு உலாப் புறப்பட்டார்.

சிவன் திரு உலாப் புறப்பட்ட தெரு இனிய மொழிகளைப் பேசும் தன்மையினராகிய பெண்களின் பேரார்வத்தை உடையதாயிற்று. ஏழுவகைப் பருவ மாதர்களும் அப்பெருமானைக்

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

கண்டு காதல் கொள்கின்றனர். இறைவனைத் தலைவனாகவும் அவனருளை விரும்பிய மன்னுயிர்களை அத்தலைவன் பால் காதல் கொண்டு மயங்கிய பெண்களாகவும் வைத்துப் பாடப்பெற்றது, இத் திருக்கைலாய ஞானஉலா.

இப்பிரபந்தத்தினூடாக சிவனுடைய முழுமுதல் தன்மையை சேரமான் பெருமாள் விளக்கிய திறம் அறிந்து இன்புறத்தக்கதாகும். இத் திருவுலாவாலே திருச்சிற்றம்பலக் கோவையார் போன்று செந்தமிழில் முதன்முதல் தோன்றிய திருவுலா என எல்லோராலும் சிறப்பித்துச் சொல்லப்படும்.

மேலும் கயிலைக்கண் அரங்கேற்றப்பட்ட இத் திருவுலா அங்குள்ள மாசாத்தனார் வாயிலாக திருப்பிடவூருக்கு வந்து தமிழ்நாட்டிற்கு உலவுவதாகிவிட்டது.

“தேவர் அறியாத தோற்றத்தான் தேவரைத்தான் பரனாய
மேவியவாறே விதித்தமைத்தான் – ஓவாதே
எவ்வுருவம் யாரொருவர் உள்குவன் உள்ளத்துள்
அவ்வுருவாய்த் தோன்றி அருள் கொடுப்பான் எவ்வுருவும்
தானேயாய் நின்றளிப்பான் தன்னிற் பிறிதுருவம்
ஏனோர்க்கும் காண்பரிய எம்பெருமான் – ஆனாத
சீரார் சிவலோகம் தன்னுள் சிவபுரத்தில்
ஏரார் திருக்கோயில் உள்ளிருப்ப – ஆராய்ந்து
செங்கண் அமரர் புறங்கடைக்கண் சென்(று) ஈண்பு
எங்கட்குக் காட்சியருள் என்றிருப்ப”
திருக்கைலாய ஞான உலா (6 – 10)

கண்ணிகள் 6 – 10 வரையான பாடங்களின்படி, மேலான விண்ணவரும் காணமுடியாத வியன்மிகு மேனியன். அந்த தேவர்களைத்-தான் சங்கற்பித்தபடியே படைத்து உரிய சூழ்நிலை உதவினன். எவரொருவர் எந்த எந்த உருவில் இடையறாது தன்னை எண்ணினாலும், உள்ளத்துள் அவ்அவ் உருவங்களாகவே வெளிப்பட்டு திருவருள் பாலிப்பவன். அன்பர் என்னும் எல்லா உருவங்களும் தானே ஆகியிருந்து புறத்திலும் காட்சி தருபவன். தன்னை காட்டிலும், வேறு ஓர் உருவம் எத்தகையோர்க்கும் காண்பதற்கு இயலாத பெருமையை உடைய இவ் இறைவன் நீங்காத சிறப்புப் பொருந்திய சிவலோகம் தன்னுள் சிவபுரத்தில் அழகு நிறைந்த திருக்கோயிலுள் இறைவன் இனிது வீற்றிருக்க, தரிசன காலத்தைச் சிந்தித்து உணர்ந்து செம்மையான கண்களையுயை தேவர்கள் தலைவாயிலில் சென்று நெருக்கமாக நின்று

அடியார்களுக்குச் சேவையை அருள் என்று விநயத்துடன் கூவி வேண்டுதல் என்றவாறாக அக் கண்ணி வரிகள் இறைவன் சிறப்பை எடுத்தியம்புகின்றன.

அடுத்து 31 – 35 வரையான கண்ணிகளின் சிறப்பிற்கமைய
”பைந்நாகம் எட்டும் சுடரெடுப்பப் பைந்தறுகன்
தாங்கிய கைந்நாகம் எட்டும் களல்வணங்க – மெய்ந்நாடு
மேகம் விதானமாய் மின்னெவாம் சூழ்கொடியாய்
மேகத்(து) உருமும் முரசறையப் – போகஞ்சேர்
தும்புரு நாரதர்கள் பாடத் தொடர்ந்தெங்கும்
கொம்புருவ நுண்ணிடையார் கூத்தாட – எம் பெருமான்
விண்ணோர் பணிய உயர்ந்த விளங்கொழிசேர்
வெண்ணார் மழவிடையை மேல் கொண்டாங்(கு) எண்ணார்
கருத்துடைய பாரிடங்கள் காப்பொத்துச் செய்யத்
திருக்கடைகள் ஏழ் கழிந்தபோதில்”

கண்ணிகள் 31 – 35ன்படி இந் நிலவுலகத்தின்கீழ் தலைமையாகத் தங்கியிருந்த படங்களையுடைய எட்டுப் பாம்புகளும், விளக்குகளை ஏந்திவர, பசுமையும், அஞ்சாமையும் கொண்ட துதிக்கையை உடைய எட்டுத்திக்கு யானைகளும் திருவடிகளை வணங்கவும், மெய்ம்மையை உடைய விண்ணில் உள்ள மேகங்களே மேற்கட்டியாய் விளங்க, மின்னல்கள் அனைத்தும் சூழ்ந்திருக்கும் கொடிகளாய் அமைய, மேகத்தின் இடியே முரசுவாத்தியமாய் ஒலிக்கவும், இன்பம் நிறைந்த தும்புரு நாரதர் எனும் இரு முனிவர்கள், தத்தம் யாழில் அமலன் புகழைச் சேர்த்துப்பாட, பூங்கொடிபோல வடிவமும், நுண்ணிய இடையையுடைய பல மாதர்கள் எல்லா இடங்களிலும் தொடர்ச்சியாகப் பரவி பாத திருத்தம் பண்ணி வரவும், எமது சிவபெருமான் தரிசனத்திற்குக் காத்திருந்த தேவர்கள் எல்லோரும் வணங்கவும், உயர்ச்சி பொருந்தியதும் என்றும் விளங்குகின்ற பேரொளி உடையதுமான வெண்மை நிறைந்த இளமையுடைய இடபத்தின் மேலமர்ந்து, எப்போதும் தம்மையே தியானிக்கப் பொருந்திய மனத்தையுடைய பூதகணங்கள் ஒன்றுபட்டுக் காவல் செய்துவர, சிறந்த ஏழுவாயிற் படியைக் கடந்து சென்ற சமயத்து,

”குடமுழவம் கொக்கரை வீணை குழல் யாழ்
இடமாந்தடாரி படகம் – இடவிய
மத்தளர் துந்துபி வாய்ந்த முருடிவற்றால்
எத்திசை தோறும் எழுந்தியம்ப – ஒத்துடனே
மங்கலம் பாடுவார் வந்திறைஞ்ச மல்லரும்

கிங்கரும் எங்கும் கிலுகிலுப்பத் – தங்கிய
ஆறாம் இருதுவும் யோகும் அருந்தவமும்
மாறாத முத்திரையும் மந்திரமும்” (46 – 50)

வாசிக்கப்படும் குடமுழவம், கொக்கரை, வீணை, புல்லாங்குழல், யாழ் இடம்பரந்தபம்பை, படகம், வலியுடைய மத்தளம், துந்துபி, வாய்பாக அமைந்த முருடு ஆகிய இவ் வாத்தியங்களால் எல்லாத் திசைகளிலும், ஓசைமிக்கு ஒலிக்கவும், வாத்தியங்களுடன் சேர்ந்து அதே காலத்தில் மங்கலப் பாடகர் வந்து வணங்க, மல்லரும் கிங்கரும், எவ்விடத்தும் நிறைந்து ஓசை செய்ய பொருந்திய ஆறு பருவங்களுக்குரிய அதிதேவதைகளும், யோகங்களுக்குரிய அதிதேவதைகளும், அருமையான தலங்கட்குரிய அதிதெய்வங்களும், சிவபூசையில் கையாளப் பெறுவதால் பயன் அளித்தலில் மாறுதல் இல்லாத தேனு, அங்குசம், பதாகை ஆகிய முத்திரைகட்குரிய அதிதெய்வங்களும், மந்திரங்கட்குரிய அதிதெய்வங்களும், முடிவாக நிறைந்த கால தேவதைகளும், கணப்பொழுதிற்கு உரிய தேவதைகளும், குணங்களுக்குரிய அதிதேவதைகளும் என்று அக்கண்ணிகளின் சிறப்புக்கள் இயம்புகின்றன.

இவ்வாறாக சேரமான் பெருமாள் நாயனாரின் திருவாரூர் மும்மணிக்கோவை, மற்றும் திருக்கைலாய ஞானஉலா ஆகிய இரு பிரபந்த நூல்களின் தமிழிசைச் சிறப்புக்கள் தகுந்த இசை அமைக்கப்பட்டு அதற்குரிய விளக்கச் சிறப்புக்களுடன் விபரிக்கப்பட்டுள்ளன.

இனிவரும் காலங்களில் இந்நூல்களிலுள்ள அனைத்துச் சிறப்பான தமிழிசைச் சிறப்புக்களை உணர்ந்து மாணவர்கள் கற்க முன்வரவேண்டும். இவை கற்பிக்கப்பட வேண்டிய இக் காலத்திற்கு உகந்தவையாக காணப்படுகின்றன. பேராளர்கள், அறிஞர்கள், இசைச்சான்றோர் இவற்றைச் செம்மையாக எதிர்காலச் சந்ததியினருக்கு இன்னிசைப் பாடல்களை இசைத்து இறுவட்டுக்களாக, இன்னிசை விரிவுரைகளை அமைத்து இறுவட்டுக்கள், ஒலி, ஒளிப்பேழைகளாக உருவாக்கினால் நலமுள்ளதாக அமையுமென இவ் ஆய்வூடாக முன்மொழிந்த கருத்துக்கள் அமைகின்றன.

உசாத்துணை நூல்கள்

1. வெள்ளை வாரணன். வித் - பன்னிருதிருமுறை வரலாறு – 1972.
2. சதுரா பதிப்பு - பன்னிருதிருமுறைகள் – 2004.
3. சுந்தரம் வீ. பா. கா - தமிழிசைக் களஞ்சியம் – பாகம் I, II, III, IV
4. சென்னை பதிப்பு - அறுபத்து மூவர் நாயன்மார்கள் வரலாறு